பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 29 வியாழக்கிழமை 11.06.2020 கதிர் 218

### இது ரகசியம் அல்ல!

ஓரிரு வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் ஓர் அரசியல் விளக்கவுரைக் கூட்டம் நடந்தது. அதில் வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினராக விருந்த சட்டத்தரணி பக்கம் 02 »

# வடக்கில் கூட்டமைப்பு கோலோச்சும்! தெற்கில் பெரமுன கொடி பறக்கும்!

## அடித்துக் கூறுகின்றார் பீரிஸ்



கொழும்பு, ஜுன்11

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் பல கட்சிகள் போட்டியிட்டாலும் அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அதிக ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி பெறும். ஆனால், தெற்கு உட்பட ஏனைய பகுதிகளில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியே வெற்றி பெறும். அந்த வெற்றி வரலாற்று வெற்றியாகப் பதிவாகும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். 2☞

## நேற்றிரவு வெளியானது தேர்தல் வர்த்தமானி!

கொழும்பு, ஜுன் 11

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளமை தொடர்பான அதி விசேட வர்த்தமானி நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 2☞

## கொரோனாத் தொற்று 1,869 நேற்று 10 பேர் அடையாளம்

கொழும்பு, ஜுன் 11

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று 10 அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 11 மணியளவில் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் 2☞

## பேஸ்புக் போராளிகளுக்கு கழிவாளம் போட்ட தமிழரசு

### கண்டபடி விமர்சிப்பவர்கள் கட்சியில் இருந்து 'அவுட்'

யாழ்ப்பாணம், ஜுன் 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்கள், வேட்பாளர்கள் தொடர்பில் முகநூலில் விமர்சிக்கும் இலங்கை தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணி உறுப்பினர்கள் கட்சியை விட்டு நீக்கப்படுவார்கள்.

இந்த அதிரடித் தீர்மானத்தை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் யாழ். மாவட்டக் கிளை நேற்றுக் கூடி எடுத்தது.

வாலிபர் முன்னணியின் யாழ் மாவட்டக்கிளை நேற்றுக் கூடியது.

இதன்போது, தமிழரசுக் கட்சியின் பேஸ்புக் போராளிகள் பற்றியே அதிகம் பேசப்பட்டது. அணியாகப் பிரிந்து நின்று மறு தரப்பு பிரமுகரை 2☞

## பொலிஸாரின் அரஜாகத்துக்கு எதிராக நாமல் கடும் கண்டனம்

கொழும்பு, ஜுன் 11

அமெரிக்க நாட்டில் பொலிஸாரால் கொல்லப்பட்ட ஜோர்ஜ் ப்ளாய்டிக்கு நியாயம் கோரி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இந்தத் தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

– இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொலிஸாரின் இந்தச் செயற்பாட்டுக்கு தனது ருவிட்டர் பக்கத்தில் அவர் கடும் கண்டனத்தை 2☞

## ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு தேர்தலில் முடிவு கட்டுங்கள்!

### மக்களிடம் அநுரகுமார வேண்டுகோள்

கொழும்பு, ஜுன் 11

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஜனநாயகத்துக்கு முரணான ராஜபக்ஷ குடும்ப ஆட்சியில் நாடு சிக்கிக்கொள்ளா மல் தடுக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தற்போது அரசுக்கு எதிராகச் செயற்படும் நோக்கம் கிடையாது. எனவே, நாடாளுமன்றத்தில் மக்களின் உரிமை மீறப்படும்போது அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கு தேசிய மக்கள் சக்தியை வலுப்படுத்த மக்கள் ஆதரவளிக்க வேண்டும்.

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்தார்.

தேசிய மக்கள் சக்தி 2☞

## 'மூன்றிலிரண்டு' அதுவே இலக்கு!

### 'மொட்டு'வின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களிடம் மஹிந்த இடித்துரைப்பு



கொழும்பு, ஜுன் 11

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். இதுவே எமது குறிக்கோளாக இருக்க வேண்டும். இதற்கான பிரசாரங்களை நாட்டின் சகல பகுதிகளிலும் சுகாதார விதிமுறைகளுக்கமைய நாம் ஆரம்பிக்க வேண்டும். 2☞




## முல்லைத்தீவில் தனிமையிலுள்ள ஒருவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜுன் 11

நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் முல்லைத்தீவு விமானப் படை தனிமைப்படுத்தல் மையத்தில் உள்ள ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்தத் தகவலை யாழ். போதனா 2☞

## தனியார் வகுப்புகள் 29ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, ஜுன் 11

வரையறைக்குட்பட்ட வகையில் தனியார் வகுப்புக்களை எதிர்வரும் ஜுன் 29ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவினால் விடுக்கப்பட்ட அறிவித்தலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய உரிய மேலதிக வகுப்புகள் நடத்தப்படும் இடத்தில் 2☞

## இனி இது .............

கே.சயந்தன் கூறிய ஒரு கருத்து பெரும் பரபரப்பையும் அரசியல் சர்ச்சையும் தோற்றுவித்தது.

கூட்டமைப்பு உருவாக்கம் ஒரு 'டீல்' என்றார் அப்போது சயந்தன்.

புலிகளினால் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சுடப்பட்டார்கள். மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அவற்றை நிறுத்தி புலிகளின் இணக்கத்துடனான ஓர் அரசியலைச் செய்வதற்கு ஒரு 'டீல்' உடன்பாடு காணப்பட்டது. அதனடிப்படையில் உருவானதே கூட்டமைப்பு என்ற சாரப்பட சயந்தன் பேசப்போக, சயந்தனின் கூற்றைப் பலரும் பிய்த்து உதறினர்.

வழமைபோல, புலிகள் இருந்த காலத்தில் அவர்களுக்கு எதிராக மனதில் கறுவிக் கொண்டிருந்த அரசியல்வாதிகளும், தங்களின் புலிமோக நடிப்பைக் காட்டுவதற்காக சயந்தனுக்கு எதிராகக் குத்தி முறிந்தனர்.

சயந்தனின் அந்தக் கூற்றை இப்போது வழி மொழிந்திருக்கின்றார் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா.

*"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதும் மரணதண்டனை கொடுப்பதைத் தலைவர் நிறுத்தினார்"* – என்று அவர் கூறுவது சயந்தனின் 'டீல்' பற்றிய கருத்தின் விளக்கம் போல இருக்கின்றது.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

★ ★ ★

'பேஸ்புக் போராளிகளுக்குக் கடிவாளம் போட' தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி தீர்மானித்திருக்கின்றது என்று செய்தி வெளியாகியிருக்கின்றது. நல்ல விடயம்.

எனினும் சில விவரங்களைச் சுட்டிக் காட்டுவது நமது கடமையாகின்றது.

பொதுத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு வேட்பாளர் தெரிவுகள் நடந்த போதே இந்த 'போஸ்புக்' அரசியல் குறித்து எனது இப்பத்தியில் சில விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்தேன்.

அரசியலை வியாபாரமாக்கியிருப்போர் பணத்தை விட்டெறிந்து பதினைந்து, இருபது பேரை வேதனத்துக்கு அமர்த்தி, ஆளுக்கு இருபது, முப்பது போலிப் பெயர்களில் 'பேஸ்புக்' கணக்குகளைத் திறந்து, மற்றைய சக வேட்பாளர்களை சகட்டுமேனிக்குத் திட்டவும் தம்மை ஆஹா, ஓஹோ என்று புகழவும் செய்வதன் மூலம் தமக்கு ஏதோ ஆதரவு அலை அணை புரண்டு, பெருக்கெடுத்து ஓடுவது போல மாயையைக் காட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று எச்சரித்திருந்தேன்.

இப்படி வேதனத்துக்கு முகநூல் சண்டியவர்களைப் போலிப் பெயர்களில் களமிறங்கியிருக்கும் தமது வேட்பாளர் (கள்) குறித்துத் தமிழரசு வாலிப முன்னணி நடவடிக்கை எடுக்குமா? கஷ்டம்தான். ஏனெனில் வாலிப முன்னணி மூலம் வாரிசு அரசியலை ஊக்குவித்து, அதன் வாயிலாக அரசியல் குளிர்காயும் தரப்புகள்தாமே இந்த முகநூல் போராளிகளை, போலிப் பெயர்களில் அநாமேதயமாகக் களமிறக்கியுள்ளன. அப்படியிருக்கையில் அந்தத் தரப்புகளின் விவகாரத்தில் வாலிப முன்னணி கண்டும் காணாதது போலத்தான் செயற்படும்? ஏனென்றால் நக்கினோர் நாவிழந்தோர்தானே...!

★ ★ ★

அம்பாறை மாவட்டத்தில் கருணாவின் 'கட் அவுட்' தீக்கிரையான சம்பவம் குறித்து வெளியான செய்திகளைப் பார்த்தேன். அந்தச் செய்திகளில் ஒன்றில் இந்தச் செயலைப் புரிந்த சூத்திரதாரிகளைக் கண்டு பிடிக்கப் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்தகவல் உண்மை என்றால், நமது பொலிஸார் நல்ல, திறமையான தரப்பினர்தான்...!

தேர்தல் அறிவிக்கப்பட்டாயிற்று. தெருவுக்குத் தெரு சுவரொட்டி ஒட்டுவதும், சந்திக்குச் சந்தி 'கட் – அவுட்' வைப்பதும் தேர்தல் சட்டங்களில் தடை செய்யப்பட்ட விடயங்கள்.

அந்தத் தடையை – சட்டத்தை – மீறி 'கட் –அவுட்' வைத்தோரைத் தேடிப் பிடிப்பதற்குத் திராணி இல்லாத நமது பொலிஸ், அந்தக் 'கட் – அவுட்'டுக்குத் தீயிட்ட சூத்திரதாரிகளைத் தேடிப்பிடிக்கப்போகின்றதாம்....!

இது, நல்ல விளையாட்டுப் பொலிஸ் பாருங்கோ...!

–மின்னல்–

## கொரோனாத் .............

எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை1,869 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் இயக்கச்சியில் தனிமைப்படுத்தப்பட்ட கடற்படை சிப்பாய்களில் 07, முல்லைத்தீவில் தனிமைப்படுத்தப்பட்ட கடற்படை சிப்பாய்களில் ஒருவரும், கட்டாரிலிருந்து வந்து பலகஹதென்னவில் தனிமைப்படுத்தப்பட்டவர்களில் ஒருவரும், மும்பையிலிருந்து வந்து தியத்தலாவையில் தனிமைப்படுத்தப்பட்டவர்களில் ஒருவரும் அடங்குகின்றனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் மேலும் 65 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். இதன்படி தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,122 ஆக உயர்வடைந்துள்ளது.

இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 736 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 11 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வைத்தியாசாலிகளில் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 62 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## பொலிஸாரின்.............

வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், பொலிஸ் அதிகாரிகள் ஒரு சிலரது முறையற்ற செயற்பாடுகள் பொலிஸ் திணைக்களம் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முன்னெடுத்த சிறந்த சேவைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் மிகவும் கவலைக்குரியவை. – என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## 'மூன்றிலிரண்டு'.............

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதித் தேர்தலில் எமக்குக் கிடைத்த வெற்றி முழுமை பெறவேண்டுமெனில் நாடாளுமன்றத்தின் ஆட்சி அதிகாரத்தை நாம் தனித்து நின்று மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் கைப்பற்ற வேண்டும். அப்போதுதான் ஜனாதிபதிக்கு அது பலமாக இருக்கும். அத்துடன், நாட்டு மக்களுக்கு ஜனாதிபதியும் நாமும் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றிக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

இம்முறை தேர்தலில் எதிர்க்கட்சிகள் எதுவும் எமக்குச் சவாலாக அமையாது. கொரோனா வைரஸ் மட்டுமே எமக்குச் சவாலாக அமைந்தது. அதுவும் முடிவுக்கு வந்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் ஒற்றுமை இல்லாதபடியால்தான் ஆணைக்குழு மீது எல்லோரும் சந்தேகப்படவேண்டி வந்தது. இருப்பினும் பொதுத்தேர்தல் திகதியை ஆணைக்குழு இன்று (நேற்று) அறிவித்துள்ளது.

எனவே, சுயாதீனமான முறையில் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டிய பொறுப்பு ஆணைக்குழுவுக்கு இருக்கின்றது. இதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் ஆணைக்குழுவுக்கு நாம் வழங்கவேண்டும் – என்றார்.

## முல்லைத்தீவில்.............

வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் இந்தியாவில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவரோடு தொடர்பைப் பேணியவர்கள் 15 பேருக்கான பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. அவர்களில் ஒருவருக்கும் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் நேற்று முன் தினம் 13 பேருக்கான மாதிரிகள் எடுக்கப்பட்டு கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று பரிசோதிக்கப்பட்டது. அவர்களிலும் ஒருவருக்கும் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

நேற்று 119 பேருக்கான பரிசோதனைகள் யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் மருத்துவபீட ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்பட்டன. இதில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

பரிசோதனைக்குட்பட்டவர்களின் விவரங்கள்:

போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்டவர்கள் – 5 பேர். பொது வைத்தியசாலை வவுனியா – ஒருவர். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு உடுவில் – 15 பேர்.

இலங்கை விமானப்படை தனிமைப்படுத்தல் மையம் முல்லைத்தீவு – 98 பேர். (ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.)

## நேற்றிரவு.............

02ஆம் திகதி நாடாளுமன்றம் கலைப்பு தொடர்பான அதி விசேட வர்த்தமானி வெளியானதைத் தொடர்ந்து, அதில் ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், வேட்புமனுத்தாக்கல் மார்ச் 19ஆம் திகதி நிறைவடைந்ததைத் தொடர்ந்து கொரோனா பரவல் காரணமாக, தேர்தலை நடத்த முடியாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்ததோடு, மார்ச் 21 ஆம் திகதி அது தொடர்பான அதி விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டது.

அதன் பின்னர் மீண்டும் ஜூன் 20ஆம் திகதி தேர்தல் இடம்பெறும் என ஏப்ரல் 20ஆம் திகதி மற்றுமொரு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

ஆயினும் அந்தத் திகதியிலும், தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்பு இடம்பெறாத நிலையில், மீண்டும் நேற்றுக் கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு, எதிர்வரும் ஆகஸ்ட் 05ஆம் திகதி புதன்கிழமை தேர்தலை நடத்துவதற்கான முடிவை அறிவித்திருந்தது. அதற்கமைய அதி விசேட வர்த்தமானி அறிவிப்பும் நேற்றிரவு வெளியாகியுள்ளது.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்கள் அடங்கிய அதி விசேட வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷ .............

அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் தற்போது நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. அதற்குப் பதிலாக ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வும், பல முக்கிய அமைச்சுக்களைத் தன்வசம் கொண்டுள்ள அமைச்சராக சமல் ராஜபக்ஷவும் , ஜனாதிபதியால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முக்கிய ஜனாதிபதி செயலணிகளின் பிரதானியாக பஸில் ராஜபக்ஷவும் கொண்ட குடும்பம் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கின்றது. இது ஜனநாயக ஆட்சி கிடையாது. எனவே, பொதுத்தேர்தலில் இந்தக் குடும்ப ஆட்சிக்கு நாட்டு மக்கள் முடிவு கட்ட வேண்டும்.

ஓகஸ்ட் மாதம் தேர்தல் நடத்தப்படும் அதேவேளை மூன்று பிரதான காரணிகளில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். தேர்தலைக் காரணம் காட்டி எந்தவொரு பிரஜையும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகக் கூடாது, தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச அதிகாரிகளின் உயிருக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் அச்சுறுத்தல் ஏற்படக் கூடாது, அரசியல்வாதிகளுக்குப் பிரசாரங்களின் ஊடாக தமது கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்வதற்குச் சாதாரண சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்பதே அந்த மூன்று காரணிகளாகும். இந்தக் காரணிகளை கவனத்தில்கொண்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக்

4

## வடக்கில் .............

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பில் கருத்துரைக்கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ் மக்கள் அதிகம் செறிந்து வாழும் வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒவ்வொரு தேர்தல்களிலும் வெற்றி பெற்று வருகின்றது. தமிழர்களின் பிரதிநிதிகளாக அவர்கள் இருப்பதால் ஒவ்வொரு தேர்தல் வெற்றியும் அவர்களுக்குச் சொந்தமாகின்றது. ஆனால், தெற்கு உட்பட ஏனைய பகுதிகளின் நிலைமை வேறு.

இந்தப் பகுதிகளில் கடந்த காலங்களில் வலுமிக்க தேசிய கட்சிகள் தேர்தல்களில் போட்டியிட்டன. ஆனால், இம்முறை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைத் தவிர ஏனைய கட்சிகள் வலுவிழந்து போய்விட்டன. சிறந்த கட்சித் தலைவர்கள் இல்லாதபடியால் பெரும்பாலான மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பின்னால் அணி திரண்டுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எமது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சிறந்த தலைமைத்துவத்தையும் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதிய எதிர்காலத் திட்டங்களையும் கொண்டுள்ளது. எமது கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் பலசாலிகள்; மக்கள் செல்வாக்கை அதிகம் கொண்டவர்கள்.

எனவே, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெருவெற்றியீட்டியமையைப் போன்று இம்முறை நாடாளுமன்றத் தேர்தலிலும் நாம் மாபெரும் வரலாற்று வெற்றியைப் பெறுவோம். அதாவது அதிக ஆசனங்களுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை நாம் பெறுவது உறுதி – என்றார்.

## தனியார்.............

இட அளவுக்கு அமைவாக சமூக இடைவெளியைப் பேணி, ஒரு மேலதிக வகுப்பில் கலந்துகொள்ளக்கூடிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 100 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மாணவர்கள் 100 பேருக்குக் குறைவான இட வசதியைக் கொண்ட இடங்களில் வழமையாக வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையில் அரைவாசியினர் மாத்திரம் பங்கு கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அனுமதியானது கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் அதனை முழுமையாகப் பின்பற்றுவார்கள் என ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அமைவாகவாகும் என்று அந்த அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பேஸ்புக் .............

பேஸ்புக்கில் அவதூறு செய்வதைப் பலரும் சுட்டிக்காட்டினர்.

தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களை பற்றியோ, கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களைபற்றியோ கட்சியின் இளைஞரணியினர் யாராவது முகநூலில் பகிரங்கமாக அவதூறாக எழுதினால், அது குறித்து கட்சித் தலைமையின் கவனத்துக்குக் கொண்டு சென்று, உடனடியாக வாலிபர் முன்னணியில் இருந்தும், கட்சியிலிருந்தும் நீக்குவது என முடிவானது.

கட்சியாக அல்லாமல், ஒரு வேட்பாளரின் அணியாக – சமூகச் செயற்பாட்டாளர்கள் என்ற பெயரில் – முகநூலில் அவதூறு பரப்பி வருபவர்களைப் பற்றியும் ஆராயப்பட்டது. இந்த வகையானவர்களை – அவர்கள் ஆதரிக்கும் பிரமுகர்கள் ஊடாக கட்டுப்படுத்துவது எனத் தீர்மனிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையானவர்கள் சிலர் இரவில் நிதானமிழந்த நிலையில், தமிழரசுக் கட்சியின் சில பிரமுகர்களை அவதூறு செய்து வருகின்றமையையும் சுட்டிக்காட்டினர். இந்த வகையானவர்கள் கட்டுக்குள் வராவிட்டால், அவர்கள் தமிழரசுக் கட்சி சார்ந்தவர்கள் அல்லர், அவர்களுக்கும் கட்சிக்கும் தொடர்பில்லையென, பெயர் குறிப்பிட்டு அறிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறிப்பிட்ட ஒரு வேட்பாளரை ஆதரிப்பதில்லையென்றும், அனைத்து வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கையிலும் ஈடுபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# மண்டைதீவுக் கடலில் பலியான 31 மீனவரின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தல் குருநகரில்












மண்டைதீவுக் கடலில் வைத்துக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று உறவினர்களால் கடைப்பிடிக்கப்பட்டது.

குருநகர் சனசமூக நிலைய முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் நேற்றுக் காலை 8 மணியளவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

1986 ஜூன் 10 ஆம் திகதி குருநகர் துறையில் இருந்து 'தூயஒளி' எனும் படகில் 31 மீனவர்கள் முகத்துவாரம் வெளிச்சக்கூடு தாண்டி மண்டைதீவுக் கடலில் இறங்கினார்கள். அவர்களில் நால்வர் படகில் நின்றனர்.

வலை வளைக்க மீனவர்கள் தயாராகவிருந்த சமயம் பலவித மான ஆயுதங்கள் பொருத்தப்பட்ட சிறியரக கப்பலில் முகமூடியணிந்த படி வந்திறங்கியவர்களினால் அவர்கள் அனைவரும் கொன்று குவிக்கப்பட்டனர்.

அந்தக் கொடூரத்தில் கொல்லப்பட்டோரின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தலே நேற்று இடம்பெற்றது.



## விண்ணப்பங்கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் எந்திரவியற் பட்டமாணிக் கற்கை நெறி, விஞ்ஞானப் பட்டமாணிக் கற்கைநெறிக்கானவிண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அது மட்டுமன்றி குறித்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் விஞ்ஞான, பொறியியல் அத்திபாரக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களும் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம். இந்தக் கற்கைநெறிக்குரிய அனைத்து வகுப்புகளும் யாழ். பிராந்திய நிலையத்தில் இடம்பெறும்.

விண்ணப்பப் படிவங்களை 30.6.2020 வரை பிறவுண் விதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாண பிராந்திய நிலையத்திலும், www.ou.ac.lk/online-application/எனும் இணையத்தள முகவரிக்குள்ளும் பிரவேசித்துச் சமர்ப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

*வடமாகாணப் பண்பாட்டலுவல்கள்திணைக்களத் தால் வருடா வருடம் நடத் தப்படுகின்ற போட்டிகள் மற்றும் விருது வழங்கல்களுக்கான விண்ணப்பங்கள் 2020.01.8அன்று கோரப்பட்டு அவற்றுக்கான முடிவு திகதி 31.3.2020 என அறிவிக்கப்பட்டிருந்தது.*

*நாட்டின் சூழ்நிலை காரணமாகப் பின்வரும் விருது தெரிவுகளுக்கான இறுதித் திகதி எதிர்வரும் 30.6.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*விருது, போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களைப் பிரதேசசெயலககலாசாரஉத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.*

# மூழ்கும் நிலையில் அரசு மேர்வின் சில்வா கருத்து

கொழும்பு, ஜூன் 11

**நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாத அரசாங்கம் தற்போது மூழ்கிப் போகும் அபாயத்தில் உள்ளதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் ஊடக சந்திப்பொன்றை அவர் நடத்தியிருந்தார். ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2005ஆம்ஆண்டுநான்மஹிந்தராஜபக்ஷவின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தவன். அது குறித்து அவர் நன்கறிவார். அத்துடன் அவர் வழங்கியபொறுப்புகளைஉண்மையாகநிறைவேற்றினேன்.

இப்போது ஓர் இரகசியத்தை வெளியிட எதிர்பார்க்கின்றேன் இது வெறும் இரகசியம் மாத்திரமே, புறங்கூறுதல் அல்ல.

பிரபாகரனுக்கு இலஞ்சம் வழங்கித் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரிய தரப்பினர் இன்று ரட்ண ஜீவன் ஹூல் தெரிவித்த கருத்தை பிடித்துக்கொண்டு தடுமாறுகின்றனர்.

அன்றைய நிலையில் வடக்கில் மக்கள் வாக்களிக்கவில்லை. வடக்கில் இருந்த சட்டத்தரணி ஒருவருக்கும், ஊடகவியலாளர் ஒருவருக்கும் இலஞ்சம் வழங்கி – அதாவது தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட தமிழ் மக்களுக்குப் பணம் கொடுத்து



– தேர்தலை புறக்கணிக்கக் கோரப்பட்டது. வெற்றி தேவையாக இருந்ததால் நாமும் ஒத்துழைத்தோம்.

அன்று அவ்வாறு பிரபாகரனுக்கு இலஞ்சம் வழக்கித் தேர்தலை புறக்கணிக்க கோரிய தரப்பினர் இன்று பேராசிரியர் ஒருவரின் (ஹூலின்) கருத்தை வைத்துக்கொண்டு தடுமாறுகின்றனர்.

மோசடிக்காரர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்றே அவர் கூறியிருந்தார். தொப்பி அளவென்றால் போட்டுக் கொள்ளுங்கள். – எனவும் மேவின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியா தொல்லியல் பகுதியில் புதையல் தோண்டிய மூவர் கைது

வவுனியா நத்திமித்திரகமவில் உள்ள கிப்புல்கல மலையில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த வைத்தியர் ஒருவரது மனைவி உட்பட மூன்று பேர் நேற்று முன்தினம் மாலை பொஹஸ்வெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிப்புல்கல மலைப்பகுதியில் சுமார் இரண்டு அடி ஆழத்திற்கு புதையல் தோண்டுகின்றனர் எனப் பொஹவெஸ்வாவே பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் மூவரைக் கைது செய்துள்ளனர்.

அத்துடன்பூஜைப்பொருள்கள்,பித்தளை மோதிரங்கள் , புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வவுனியா நந்திமித்ரகமவை சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் புதையல் தோண்டிய நந்திமித்ரகமவிலுள்ள கிம்புல்கல மலைப்பகுதியானது மிகவும் பழமை வாய்ந்த புராதன இடிபாடுகளைக்கொண்டது. அத்துடன் தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமான பகுதியாகும் . கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் கள், உபகரணங்களுடன் விசாரணைக ளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நம் தலைவர்கள் தெரிவு

***"தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வென்றெடுக்க நாம் ஓயாது பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எம்மைத் தவிர வேறு எவரும் இப்பயணத்தில் ஈடுபடவில்லை என்பது எமது அன்புக்குரிய மக்களுக்கு நன்கு தெரியும். எனவே எமது அரசியல் தீர்வை வென்றெடுக்க எமது கரங்களை எமது மக்கள் மென்மேலும் பலப்படுத்த வேண்டும்"***

**– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.**

***"வடக்கு – கிழக்கில் இம்முறை அதிக ஆசனங்களை நாம் கைப்பற்ற வேண்டும். அப்போதுதான் நாடாளுமன்றத்தில் பலம் பொருந்திய சக்தியாக நாம் திகழமுடியும். தமிழர்களின் உரிமைகளை நாம் அரசிடம் தட்டிக் கேட்க முடியும்"*** **– என்றும் உரைத்திருக்கின்றார் சம்பந்தன்.**

**காலங்காலமாகத் தேர்தல் சமயத்தில் முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பாடும் ஒரே புறணிதான் இது.**

**1977இல் நாடாளுமன்றத் தேர்தலில் சம்பந்தன் இறங்கிய காலத்தில் இருந்து ஒவ்வொரு தேர்தல் சமயமும் அவரும் அவரைச் சார்ந்தோரும் பிய்த்து உதறும் வசனங்கள்தாம் இவை.**

**கேட்டுக் கேட்டுத் தமிழ் மக்களின் காதுகளும் புளித்துப்போய் விட்டன. அதுபோல ஆரம்பத்தில் கூட்டமைப்பின் உதய சூரியனுக்கும், கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் தமிழரசின் வீட்டுக்கும் புள்ளடி போட்டுத் தமிழ் மக்களும் களைத்துப் போய்விட்டனர்.**

**தங்களின் இந்தப் புறணியைக் கேட்டுத் தமிழர்களின் காதுகள் புளித்துப் போனாலும், வீட்டுக்குப் புள்ளடியிட்டு அவர்கள் களைத்துப் போனாலும், அதுவேதான் தொடர்கதையாக நீளும், சாகும் வரைக் காலாதிகாலமாகத் தாங்கள் எம்.பிக்கள் பதவியில் தொடரலாம் என்பது பல கூட்டமைப்புப் பிரகிருதிகளுக்கு நன்கு தெரியும்.**

**தமிழர்கள் மத்தியிலிருந்து வலுவான மாற்று சக்திகள் எழாத வரையில் –**

**அல்லது தமது மத்தியிலிருக்கும் வலுவான மாற்றுத் தலைமைகளைத் தமிழ் மக்கள் ஒன்று பட்டு வலுப்படுத்தாத வரையில் –**

***'எம்மைத் தவிர வேறு எவரும் இப்பயணத்தில் இல்லை'*** **என்ற பாணியிலான பேச்சு சம்பந்தன், சுமந்திரன், மாவை தரப்புகளிடமிருந்து வருவது தவிர்க்க முடியாததுதான்.**

**சம்பந்தனின் கருத்தில் இன்னொரு வேடிக்கையும் உண்டு.**

***"வடக்கு – கிழக்கில் அதிக ஆசனங்களை இம்முறை நாம் கைப்பற்ற வேண்டும். அப்போதுதான் பலம் பொருந்திய பேரம் பேசும் சக்தியாக நாம் திகழமுடியும். தமிழர்களின் உரிமைகளை அரசிடம் தட்டிக் கேட்க முடியும்."*** **– என்றும் அவர் கூறியமையைத்தான் சுட்டுகின்றோம். உண்மையான கருத்துடன் இதை அவர் கூறியிருக்கமாட்டார், ஒரு பேச்சுக்குத்தான் சொல்லியிருப்பார் என்று நினைக்கின்றோம்.**

**இவ்வளவு தடவைகளும் பேரம் பேசுவதற்கான பலமில்லாத சக்தியாகவே அவரது தரப்பைத் தமிழர்கள் நாடாளுமன்றுக்கு அனுப்பினார்கள்? அப்போதெல்லாம் அவர்கள் எந்த அரசிடம், என்ன தட்டிக்கேட்டார்கள்? அவரையே – சம்பந்தனையே – எதிர்க்கட்சித் தலைவராக அனுப்பினோமே, அப்போதாவது அரசிடம் ஏதேனும் தட்டிக் கேட்டாரா? ஏன், கடைசியாக நாட்டின் அரசாட்சியைத் தீர்மானிக்கும் வலிமையான தரப்பாகவே அவரது தலைமையிலான குழுவை நாடாளுமன்றத்தில் இருத்தினோமே, அப்போதாவது அவர்கள் அரசிடம் ஏதேனும் தட்டிக் கேட்டு, வெட்டி வீழ்த்தினார்களா? கடந்த தடவை 16 பேரை ஒன்றாக அனுப்பினோம். அரசைத் தட்டிக் கேட்க வேண்டாம், குறைந்த பட்சம் அந்தப் பதினாறு பேரில் எத்தனை பேர் நாடாளுமன்ற மேசைகளையாவது தட்டி, பலத்த – கர்ஜிப்புப் பாணியில் – தமிழர் நியாயங்களை எதிரொலித்தார்கள்? அரசைத் தட்டிக் கேட்டார்கள்? அரசியல், சட்டம், விவாத நுணுக்கம் தெரியாதவர்களையும், மொழியாற்றல் இல்லாத டம்மிகளையும் தமது வேட்பாளர்களாக நிறுத்தி, அவர்களையும் கூட்டிக்கொண்டு நாடாளுமன்றத்துக்குப் போய் 'சம்பந்தன் அன்ட் கோ' என்ன கிழித்து விட்டது இவ்வளவு காலமும்?**

**கூட்டமைப்பின் சார்பில் தும்புக்கட்டையை நிறுத்தினாலும் வாக்குப் போடுவோம் என்ற தமிழர்களின் உறுதியான நிலைப்பாட்டை வைத்துத் தானே இன்று வரை சம்பந்தனும், மாவையும் தமிழ் மக்கள் தலையில் மிளகாய் அரைத்துக் கொண்டிருக்கின்றார்கள்? இது எல்லோருக்கும் தெரியும், புரியும்.**

***'அன்புத் தமிழ் மக்கள் எங்களுக்குத்தான் வாக்களிப்பார்கள்'*** **என்று உரிமையுடன் சம்பந்தன் நம்புவதை நாம் சவாலுக்கு உட்படுத்த வரவில்லை.**

**ஆனால், அப்படி அன்புக்குரிய மக்களுக்கு – காலாதிகாலம் தங்களுக்கே திரண்டு வாக்களிக்கும் தமிழ் மக்களுக்கு – தாங்கள் சற்றேனும் நீதியாக, நியாயமாக நடந்து கொள்கின்றார்கள் என்று கூட்டமைப்பின் மூத்த தலைவர்களான சம்பந்தனும், மாவையும் சற்றுத் தங்கள் மனசாட்சியைத் தொட்டுச் சொல்வார்களா?**

**குறைந்த பட்சம் தமது மக்களின் தெரிவுக்காக, சரியான சக வேட்பாளர்களையாவது களம் இறக்கினார்களா சம்பந்தனும் மாவையும்?**

**தமிழர் மத்தியில் மாற்றுத் தரப்பு இல்லை என்பதை வைத்து வாழ்க்கைக் காலம் முழுவதும் எம்.பிக்களாக இருந்து விட்டுச் சென்றார்கள் என்ற வரலாற்றைத்தான் அவர்கள் கடைசியில் விட்டுச் செல்வார்கள் – ஓரிரு திறமைசாலிகளுக்கு மட்டுமே இடம் கொடுத்து அடையாளப்படுத்தினர், மற்றெல்லோரும் தும்புக்கட்டைக்கு விழுந்த வாக்குகளில் வந்த செல்வாக்கு என்ற பெயருடன் எம்.பி.பதவிக் கதிரைகளை ஆண்டுக் கணக்கில் சூடேற்றினார்கள் என்ற கதை தொடரத்தான் வழி செய்தார்கள் என்ற அவப்பெயரே மிஞ்சும்.**

**தமது கடைசிக் காலங்களிலும் கூட அதைத்திருத்த – அவர்கள் ஏதும் வழி பண்ணவில்லை என்ற நீங்காக் கறை நீடிக்கும் என்பதுதான் வேதனைக்குரிய உண்மை.**

# நல்லூர் வாள்வெட்டுச் சந்தேகநபர்களான கெமி குழு உறுப்பினர்கள் விளக்கமறியலில்

நல்லூரில் இடம்பெற்ற வாள்வெட்டுடன் தொடர்புபட்ட கெமி குழு உறுப்பினர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க யாழ் நீதிவான் பீற்றர் போல் உத்தரவிட்டார்

யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரச்சந்தியில் கெமி குழுவினால் மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டில் அப்பகுதியில் நின்றிருந்த இருவர் படுகாயமடைந்தமையுடன் ஓட்டோ ஒன்றும் அடித்து சேதமாக்கப்பட்டிருந்தது.

கெமி குழுவினரால் யாழில் பல்வேறு வாள்வெட்டுச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் இதுவரை முக்கியஸ்தர்கள் எவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கவில்லை.

மேற்படி நல்லூர் வாள்வெட்டு சம்பவமானது கடந்த மே மாதம் 14 ஆம் திகதி யாழில் கொரோனா காரணமாக போடப்பட்ட ஊரடங்கு தளத்தப்பட்ட தினம் காலையில் பட்டப் பகலில் இடம்பெற்றிருந்தது. இச்சம்பவம் யாழ் பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்தற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து இச்சம்பவத்துடன் தொடர்பு பட்ட நபர்களைக் கைது செய்யும்படி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரிற்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புபட்டனர் எனத் தெரிவித்து ஆறு சந்தேக நபர்கள் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். எனினும் முக்கிய சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

கைது செய்யப்பட்ட சந்தேநபர்கள் யாழ் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டமையுடன் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். விளகக்மறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்கள் கடந்த ஜூன் மாதம் 3 ஆம் திகதி அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போது முறைப்பாட்டாளர்கள் மூன்று சந்தேகநபர்களை அடையாளம் காட்டியிருந்தனர்.

அன்றைய தினம் வழக்கை விசாரித்த பதில் நீதிவான் வி.ரி. சிவலிங்கம் சந்தேக நபர்களை 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார். இந்த வழக்கு யாழ் நீதிவான் பீற்றர் போல் முன்நிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது முறைப்பாட்டாளர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி பிரதீபன் வாள்வெட்டு இடம்பெற்ற சமயம் பதிவு செய்யப்பட்ட சி.சி.ரி.வி பதிவுகள் மற்றும் புகைப்படங்கள் என்பவற்றை நீதிவான் கவனத்திற்கு கொண்டு சென்றார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் சம்பவத்துடன் தொடர்பு பட்டவர்கள் என்பதுடன் முக்கிய சந்தேகநபர்கள் இன்னும் பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை எனவும் அவர்கள் பேரில் பல வழக்குகள் தொடர்ந்தும் நிலுவையில் உள்ளன எனவும் மன்றின் கவனத்திற்கு அவர் கொண்டு வந்திருந்தார். இந்தச் சந்தேக நபர்களிற்கு பிணை வழங்க பொலிஸாரும் மறுப்பு தெரிவித்திருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் முக்கிய சந்தேகநபர்கள் அனைவரையும் உடனடியாக கைது செய்யும் படி உத்தரவிட்டமையுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அனைவரையும் தொடர்ந்து 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். கெமி குழு மீது பாரதூரமாக வாள்வெட்டுவழக்குகள்நிலுவையில்உள்ளபோதும் முக்கிய நபர்கள் இதுவரைப் பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலையின் கணினி விஞ்ஞானத் துறை தொடர்பில் உயர்கல்வி அமைச்சு வெளியிட்ட அறிவித்தலால் குழப்பம்!

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் 1991 ஆம் ஆண்டு முதல் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு - பட்டங்கள் பெற்று நூற்றுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வெளியேறியுள்ள நிலையில், கணினி விஞ்ஞானத் துறையைப் புதிய துறையாகப் பிரகடனப்படுத்தும் உயர் கல்வி அமைச்சின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலால் குழப்ப நிலை தோன்றியிருக்கிறது.

உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் கடந்த பெப்ருவரி மாதம் 19 ஆம் திகதி, புதன்கிழமை வெளியிடப்பட்ட 2163/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அடிப்படையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் 17 ஆவது புதிய துறையாக மொழி பெயர்ப்புக் கற்கைகள் துறையும், விஞ்ஞான பீடத்தில் 7 ஆவது கற்கைத் துறையான கடற்றொழில் துறையை உடனடுத்து 8 ஆவது கற்கைத் துறையாக கணினி விஞ்ஞானத் துறை சேர்க்கப்படுவதாகவும் கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சகல பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கும், சகல வளாகங்களின் முதல்வர்களுக்கும், சகல நிலையங்களினதும் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே, 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி அப்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்தவினால் வெளியிடப்பட்ட 1435/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படியும், 2007 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி அப்போதைய உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் டபிள்யூ. ஏ. விஸ்வ வர்ணபாலவினால் வெளியிடப்பட்ட 1518/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படியும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் இருந்த 6 துறைகளில் 3 ஆவதாக கணினி விஞ்ஞானத்துறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

தற்போது 7 ஆவதாக கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட கடற்றொழில் துறையும், அதனை உடனடுத்து 8 ஆவது கற்கைத் துறையாக கணினி விஞ்ஞானத் துறை புதிய துறையாக அறிவிக்கப்பட்டிருப்பது விஞ்ஞான பீடத்தில் குழப்பத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

இது பற்றி ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குவின் ஊடாக உயர்கல்வி அமைச்சுக்குச் சுட்டிக் காட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என அறியவருகிறது.

## ராஜபக்ஷ ..............

கட்சிக்குத் தற்போது மக்களின் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துவதில் நேரம் இல்லை. மாறாக ரணில் – சஜித் தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினையும் சிறிகொத்தாவை யார் கையகப்படுத்திக் கொள்வது என்ற குறுகிய அரசியல் நோக்கமுமே அவர்களிடம் காணப்படுகின்றன.

கடந்த 2010ஆம் ஆண்டு தேர்தலில் போரைநிறைவுசெய்து நடத்தப்பட்ட தேர்தலில் 18 இலட்சத்துக்கும் அதிக வாக்கு வித்தியாசத்தில் ராஜபக்ஷ அரசு வெற்றி பெற்ற போதிலும் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் 20 உறுப்பினர்கள் அதற்கு உதவி செய்தனர். அதேபோன்ற அச்சுறுத்தல் தற்போதும் காணப்படுகின்றது.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சி எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசுக்கு எதிராகச் செயற்படுவதற்குப் பதிலாக அதே வழியில் பயணிக்கும் கட்சியாகவே காணப்படும். இவ்வாறானதொரு நெருக்கடி நிலைமையிலேயே பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் நாம் தேசிய மக்கள் சக்தியாகப் பலமான கூட்டணியாகக் களமிறங்கியுள்ளோம். எனவே, எமது கூட்டணியை வலுப்படுத்துமாறு நாம் மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

நாடாளுமன்றத்தில் மக்களின் உரிமைகள் மீறப்படுகின்றபோது அந்த உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்ற அமைப்பாக தேசிய மக்கள் சக்தி செயற்படும். அதற்கான பலமான கட்சியாக நாம் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்.

நாடாளுமன்றம் தொடர்பில் மக்கள் மத்தியில் பெரும் விமர்சனம் நிலவுகின்றது. நாட்டில் ஏதேனும் அசம்பாவிதம் நடைபெறும் போது அது நாடாளுமன்றத்தைப் பாதிக்க வேண்டும் என்று மக்கள் பிரார்த்திக்கும் நிலைமையே காணப்படுகின்றது. நாடாளுமன்றத்தின் கொள்கையை மதிப்பவர்கள் இல்லாமை, நாடாளுமன்றத்துக்குரிய கௌரவம் வழங்கப்படாமை மற்றும் ஊழல், மோசடிக்காரர்கள் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தல் போன்றவையே இதற்குக் காரணம். இவற்றைச் சரி செய்ய தேசிய மக்கள் சக்தியின் பலமான குழு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் – என்றார்.







தங்கமுலாம் பூசப்பட்ட பேழைக்குள் வைத்து அடக்கம் செய்யப்படுவதற்குக் கொண்டுசெல்லப்பட்ட ஜோர்ஜ்ஃபிளாய்ட்டுக்குக் கண்ணீர் மல்கப் பலரும் பிரியாவிடை செலுத்தினர். தனது தாயாருக்கு அருகில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.













# சுலைமானி கொலை உளவாளிக்கு தூக்கு!

## ஈரான் அறிவிப்பு



ஈராக்கில் அமெரிக்கப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்ட ஈரான் படைத்தளபதி குவாசிம் சுலைமானி கொலை விவகாரத்தில் அமெரிக்காவின் மொசாட் அமைப்புக்கு உளவாளியாகச் செயற்பட்டவருக்கு ஈரான் சாவுத் தண்டனை அறிவித்துள்ளது. குவாசிம் சுலைமானி குறித்து அமெரிக்காவின் சி.ஐ.ஏ., மற்றும் இஸ்ரேல் உளவு அமைப்பான மொசாட்டுக்கு முக்கிய தகவல்களைக் கொடுத்ததற்காக மக்முத் மவுசாவி மஜ்த் என்பவரைத் தூக்கிலிட முடிவு செய்திருப்பதாக ஈரான் நாட்டு நீதித்துறைச் செய்தி தொடர்பாளர் கோலாம்ஹுசைன் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

### சுலைமானி கொலை விவகாரம்

ஐ.எஸ். உள்ளிட்ட ஆயுததாரிகளுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த குர்துப் படைத் தளபதி குவாசிம் சுலைமானி அமெரிக்க அதிரடிப்படையினர் நடத்திய ட்ரோன் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டார். இது ஈரானுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சுலைமானி கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா தகுந்த விலை கொடுக்க நேரிடும் என்று ஈரான் எச்சரித்தது. ஈராக்கில் உள்ள அமெரிக்க விமானப்படை தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. ஆனாலும், பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை. இந்த நிலையில் உளவாளி ஒருவருக்குத் தூக்குத் தண்டனையளித்துள்ளது.

# ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் தலைவர்கள் நேரில் பங்கேற்கார்



எதிர்வரும் செப்டம்பர் மாதம் 15ஆம் திகதியன்று நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்க மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவே உலகத் தலைவர்கள் இவ்வாறு பங்கேற்காத முதல் கூட்டம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தலைவர் முகமது பாண்டே தெரிவிக்கும்போது:–

உலகத்தலைவர்கள் இந்த கூட்டத்துக்கு நியூயோர்க் வர முடியாது. ஏனென்றால் அவர்கள் தனியாக வர இயலாது. ஒரு நாட்டின் தலைவர் தனியாக வர முடியாது. எனவே இங்கு உலகத் தலைவர்கள் வருவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

உலகமெங்கும் கொரோனா வைரஸ் பரவி வரும் நிலையில், ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் தலைவர்கள் நேரில் பங்கேற்க வாய்ப்பு இல்லை. அதே நேரத்தில், பொதுவிவாதத்தை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை ஐ.நா., உறுப்பு நாடுகளுடன் எங்கள் அலுவலகம் கலந்து பேசி வருகிறது.

இந்த பொது விவாதம், கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளுடன் இணக்கமான வடிவத்தில் நடைபெறும். உயர்மட்ட விவாதத்தில் உலகத் தலைவர்கள் வருவது சாத்தியம் இல்லை என்று தோன்றினாலும்கூட, பொதுச்சபை மண்டபத்தில் 100 அல்லது அதற்கு மேற்பட்டவர்களை அனுமதிக்க முடியும் என்று அவர் கூறினார்.

# புருண்டி அதிபர் சாவு!



கிழக்கு ஆபிரிக்க நாடான புருண்டியின் அதிபர் பியர் குருன்சிஸா மாரடைப்புக் காரணமாக உயிரிழந்தார். மருத்துவமனையில் சிகிச்சை எடுந்த வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக அந்நாட்டு அரசு அறிவித்தது.

அவருக்கு வயது 55. கடந்தவாரம்மாரடைப்புக் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் தற்போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

7 நாள்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று புருண்டி அரசு தெரிவித்துள்ளது. 2005 ஆம் ஆண்டு முதல் 15 ஆண்டுகள் புருண்டியை ஆட்சி செய்தார் பியர் குருன்சிஸா என்பது குறிப்பிடத்தக்கது.



# வுஹானில் தூதரகம் திறக்கப்பட வேண்டும்


## அமெரிக்கா தெரிவிப்பு

கொரோனா வைரஸ் தொற்று ஆரம்பித்த சீன நகரமான வுஹானில் உள்ள தனது துணைத் தூதரகம் விரைவில் திறக்கப்படும் என்று அமெரிக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவுக்கான அமெரிக்கத் தூதர் டெர்ரி பிரான்ஸ்டாட் வுஹானில் மீண்டும் அமெரிக்கத் தூதரக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு விரும்புகிறார் என்று தூதரக விவகாரங்களுக்கான ஆலோசகர் பிராங்க் விட்டேக்கர் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுப் பரவுவதைத் தடுப்பதற்காகச் சீன அரசு வுஹான் நகரத்தை மூடிய பின்னர் அமெரிக்க வெளியுறவுத்துறை தனது தூதரக ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் அங்கிருந்து திரும்பப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அறிகுறியற்ற கொரோனா குறித்துப் புது விளக்கம்



கொரோனா தொற்றியிருந்தும் அறிகுறிகள் தென்படாவிடின் அவர்களிடமிருந்து கொரோனாத் தொற்றுப்பரவுவது அரிதனது என்று உலகசுகாதார நிறுவனம் சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதுகுறித்துத் தற்போது புதியதொரு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அறிகுறிகளற்ற கொரோனாவால் ஆபத்து இல்லை. காரணம், இது மற்றவர்களுக்குப் பரவுவது மிகவும் அரிதானது என்று கூறியிருந்தார் உலக சுகாதார நிறுவனத்தின் தொற்றுநோய் மருத்துவ நிபுணர் மரியாவான் கெர்கோவ்.

இதற்கே தற்போது அவர் விளக்கம் அளித்துள்ளார். அந்த விளக்கத்தில், நான் மிகவும் அரிதானது என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினேன், இது தவறான புரிதலை ஏற்படுத்தியுள்ளது.

நான் குறிப்பிடுவது ஆய்வுகளின் ஒரு பகுதியையும், வெளியிடப்படாத சில தரவுகளையுமே. அறிகுறிகள் இல்லாதவர்களிடமிருந்து எவ்வளவு பரவுகிறது என்பது இன்னும் பெரியளவில் அறியப்படாத விடயம். பல்வேறு நாடுகளிலும் இவ்வாறு அறிகுறியற்ற நோயாளிகள் குறித்த தேடலில் அவர்களிடமிருந்து ஏனையவர்களுக்குப் பரவியிருப்பது 'மிகவும் அரிதானது'. ஆனால் உலகளவில் இது உண்மையா என்பது கேள்வியே என்று அவர் விளக்கினார்.

# எல்லையிலிருந்து பின்வாங்கிய இந்தியா – சீனா இராணுவங்கள்

இந்தியா – சீனா எல்லைப் பதற்றம் குறித்துப் பேச்சுகள் நடந்த நிலையில் எல்லைப் பகுதியில் குவிந்திருந்த இரண்டு நாட்டு இராணுவத் துருப்புகளும் பின்வாங்கியுள்ளன. லடாக்கின் கல்வான் பகுதியில் இருந்து சீன இராணுவம் 2.5 கிலோ மீற்றர் தூரம் பின் வாங்கியது.

இந்திய மற்றும் சீன இராணுவங்களுக்கு இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுகள் இந்த வாரம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் லடாக்கின் கிழக்குப் பகுதியில் உள்ள பல்வேறு நிலைகளில் இருந்தும் இந்திய மற்றும் சீன இராணுவத்தினர் பின் வாங்கினர். கடந்த 6ஆம் திகதி நடந்து முடிந்த பேச்சுகளையடுத்து இரண்டாம் கட்டப் பேச்சுகள் தொடர உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதல்கட்டப் பேச்சுகளைத் தொடர்ந்து சீன இராணுவம் பின்வாங்கியது. அதன் பின்னர் இந்



திய இராணுவமும் தங்கள் இராணுவத்தினரில் சிலரையும், சில இராணுவ வாகனங்களையும் அந்தப் பகுதிகளிலிருந்து பின்வாங்குமாறு பணித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க விமானம் ஈராக்கில் தரையிறங்கும் போது விபத்து

## 4 பேர் காயம்



ஈராக்கில் தரையிறங்கிய அமெரிக்கப் போர் விமானம் விபத்துக்குள்ளாகியது. 'சி 130 எச் ஹெர்குலிஸ்' என்ற விமானமே நேற்று முன்தினம் இரவு ஈராக்கின் தலைநகர் பாக்தாத் அருகேயுள்ள கேம்ப் தாஜி விமானப்படை தளத்தில் தரை இறங்க முயற்சித்த போது விபத்துக்குள்ளாகியது. ஓடுபாதையிலிருந்து விலகி அங்கிருந்த சுவரில் மோதியது.

இதனால் சிறிய அளவில் தீப்பிடித்தது. தகவல் அறிந்து, மீட்புப்படையினர் விரைந்து தீயை அணைத்தனர். எனினும் இந்த விபத்தில் 4 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்களில் 2 பேர் விமானிகள் ஆவர். விபத்துக்குள்ளான விமானத்தில் 23 பயணிகள் இருந்ததாகத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. இந்த விபத்து குறித்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# பாடசாலைகளைத் திறக்க இந்திய அரசும் முனைப்பு

கொரோனாத் தொற்றுக் காரணமாக நீண்ட கால விடுமுறையளிக்கப்பட்டு வருகின்ற பாடசாலைகளை அடுத்த 2 மாதங்களில் திறப்பதற்கு இந்திய அரசு திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நோய் அதிக அளவில் பரவி வருவதால் உடனடியாகப் பாடசாலைகளை திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து ஆராய்வதற்காக அனைத்து மாநில கல்வித் துறை செயலாளர்களுடன் மத்திய பள்ளி கல்வித்துறைச் செயலர் அங்கிதா கர்வால் ஆலோசனை நடத்தினார்.

இதைத்தொடர்ந்து வெளியான அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போதைய சூழ்நிலையில் பாடத்திட்டத்தில் சில பாடங்களை குறைக்கலாம் என்று திட்டமிட்டு இருக்கிறோம். அதே போல பாடசாலை நேரத்தைக் குறைப்பது குறித்தும் ஆலோசித்து வருகிறோம். பாடசாலைகளை அடுத்த 2 மாதத்தில் திறக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

# உடலுறவின் போதும் முகக்கவசம் அவசியம்

கொரோனாத் தொற்றுக் காலத்தில் பாலியல் உறவுகொள்ளும்போது முகக் கவசம் அணிவது பாதுகாப்பானது என்று அமெரிக்காவின் நியூயோர்க் நகர சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். கொரோனா தொற்றுக் காலத்தில் மக்கள் பாதுகாப்பான உடலுறவு கொள்ள உதவும் வகையில், நியூயோர்க் நகர சுகாதாரத் துறை வழிகாட்டல்களை வெளியிட்டது.

அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. உடலுறவு மூலம் கொரோனா பரவுவது குறித்து இன்றும் முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை. கொரோனாவில் இருந்து ஆண்கள் மீண்ட பிறகும், அவர்களின் மலம் மற்றும் விந்தணுக்களில் கொரோனா வைரஸை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

நியூயோர்க் நகர சுகாதாரத் துறையின் கூற்றுப்படி, கொரோனா வைரஸ்கள் உடலுறவு மூலம் எளிதில் பரவுவதில்லை. ஆனால், உமிழ்நீர் மற்றும் சுவாசத்தின் மூலம் பரவக்கூடும் என்பதால், உடலுறவில் ஈடுபடும்போது மக்கள் முகம் மறைப்பு அல்லது முகக் கவசம் அணியலாம் என்று நியூயோர்க் நகர சுகாதாரத்துறை அறிவுறுத்துகிறது

# இந்தியாவுக்கு அடுத்த தலைவலி நேபாளம் எல்லையில் தொடக்கம்

பகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுடன் எல்லைகளில் பதற்றமான சூழலுக்கு முகம்கொடுத்துவரும் இந்தியாவுக்கு நேபாளம் பக்கமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. நேபாளம் – இந்தியா காலாபானிப் பகுதி குறித்த இந்தியாவின் கோரல்கள் தவறான தரவுகளின் அடிப்படையில் அமைந்தனவாகும் என்று கூறிய நேபாள பிரதமர் கே.பி. ஹர்மா ஒலி, உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் இதைப்பற்றிப் பேசுவதை நிறுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்துப் பிரதிநிதிகள் சபையில் அவர்மேலும் கூறும்போது, 'இந்தியாவின் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்ஜி நேபாளம் பற்றிச் சிலவற்றைத் தெரிவித்தார். அவரது கருத்துக்கள் நியாயமற்றவை முறையற்றவை. அரசில் பொறுப்புள்ள பதவியிலிருக்கும் யாராவது அவரிடம் எடுத்துச் சொல்லுங்கள், அவருக்குச் சம்பந்தமில்லாத பகுதியில் நுழைந்து கருத்துக்கள் கூறுவது முறையல்ல என்று எடுத்துரையுங்கள்.

நேபாளத்தை மிரட்டும் பேச்சு நிச்சயம் கண்டிக்கப்படும்' என்றார். யோகி ஆதித்யநாத் காலாபானி பகுதி குறித்துக் கடந்த வாரம் கூறும்போது, 'அரசியல் எல்லையை நிர்ணயிக்கும் முன்னர் நேபாள் விளைவுகளை சிந்தித்துப் பார்த்துச் செய்ய வேண்டும். திபெத்துக்கு என்ன நடந்தது என்பதை நினைவில் கொள்வது நலம்' என்று கூறியதற்குத்தான் நேபாள் பிரதமர் தற்போது பதிலளித்துள்ளார்.

இந்நிலையில் நேபாளப் பிரதமர் மேலும் கூறும்போது, 'இந்தியா பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க எண்ணினால் தீர்வு கிடைக்கும். 1961, 62 முதல் இந்தியா தங்கள் இரா




ணுவத்தை காலாபானியில் நிறுத்தி வைத்துள்ளது. ஆனால் அந்தப் பகுதி எங்களுடையது. செயற்கையான காளி நதியைக் காட்டி இந்தியா அந்த இடத்துக்கு உரிமை கோருகிறது. அவர்கள் காளி கோயில் ஒன்றையும் அங்கு கட்டியிருக்கிறார்கள். எங்களுடைய உரிமை கோரல் வரலாற்று ஆவணங்களையும் தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டது' என்றார் நேபாளப் பிரதமர்.

# தீர்வை வென்றெடுக்க கூட்டமைப்பின் கரங்களைத் தேர்தலில் பலப்படுத்துக!

## வடக்கு - கிழக்கு தமிழ் மக்களிடம் சம்பந்தன் வேண்டுகோள்

**தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வென்றெடுக்க நாம் ஓயாது பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எம்மைத் தவிர வேறு எவரும் இந்தப் பயணத்தில் ஈடுபடவில்லை என்பது எமது அன்புக்குரிய தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். எனவே, அரசியல் தீர்வை வென்றெடுக்க எமது கரங்களைப் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் மென்மேலும் பலப்படுத்த வேண்டும்.**



- இவ்வாறு வடக்கு - கிழக்கு தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் ஆகஸ்ட் 05ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இந்தநிலையிலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் என்ற கொடிய நோய்த் தாக்கத்துக்கு மத்தியில் - மிகவும் கஷ்டமான நிலைமையில் நாடாளுமன்றத் தேர்தலை நாம் எதிர்கொள்ளவுள்ளோம். இந்தக் காலப்பகுதியில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் நாம் ஈடுபட வேண்டும்.

எம்மிடம் இருக்கும் வாக்குரிமையை நாம் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். இந்தக் கடமையை எமது தமிழ் மக்கள் கடந்த காலங்களிலிருந்து தவறாது செய்து வருகின்றார்கள்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் என்பதை எமது மக்கள் கடந்த தேர்தல்களில் இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். இம்முறையும் எமது மக்கள் அவ்வாறு செயற்படுவார்கள். அதில் எமக்கு நூறு வீதம் நம்பிக்கை உண்டு.

எனினும், இந்தத் தடவை எமது கரங்களை எமது மக்கள் மென்மேலும் பலப்படுத்த வேண்டும்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வென்றெடுக்க நாம் ஓயாது பயணித்துக்கொண்டிருக்கின்றோம். எம்மைத் தவிர வேறு எவரும் இந்தப் பயணத்தில் ஈடுபடவில்லை என்பது எமது அன்புக்குரிய மக்களுக்கு நன்கு தெரியும். எனவே, அரசியல் தீர்வை வென்றெடுக்க எமது கரங்களைப் பொதுத்தேர்தலில் எமது மக்கள் மென்மேலும் பலப்படுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கில் அதிக ஆசனங்களை இம்முறை நாம் கைப்பற்ற வேண்டும். அப்போதுதான் நாடாளுமன்றத்தில் பலம் பொருந்திய பேரம் பேசும் சக்தியாக நாம் திகழ முடியும். தமிழர்களின் உரிமைகளை அரசிடம் தட்டிக் கேட்க முடியும் - என்றார்.

# ரூ. 79 லட்சம் கொள்ளையிட்ட வைத்தியருடன் வேறு யாருக்கும் கொள்ளையில் தொடர்புண்டா?

## துருவி ஆராய்கின்றனர் விசாரணையாளர்கள்





கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கணக்காளர் பிரிவிலிருந்து, வைத்தியசாலை ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய மேலதிக நேரக் கொடுப்பனவு பணமான, 79 லட்சம் ரூபாவுக்கும் அதிக பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் வைத்தியர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். அவரை 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்கப் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர், மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

விளையாட்டுத் துப்பாக்கியொன்றைப் பயன்படுத்தி, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கணக்காளர் பிரிவில் காசாளரை அச்சுறுத்தி, சந்தேகநபர் திங்களன்று பணத்தைக் கொள்ளையடித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கணக்காளர் பிரிவிலிருந்து 79 லட்சம் ரூபாவுக்கும் அதிக பணத்தைக் கொள்ளையிட்டவர் எனக் கூறப்படும் வைத்தியர், இந்தக் கொள்ளை தொடர்பாக நீண்டகாலமாகத் திட்டம் தீட்டியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இதனுடன் தொடர்புடைய ஆவணங்களும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரான வைத்தியர், தற்போது மருதானை பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். அவருக்கு ஏதாவது மனநலக் குறைபாடு உள்ளதா என்று ஆராயவுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

விளையாட்டுத் துப்பாக்கியைப் பயன்படுத்தி பணத்தை இவ்வாறு கொள்ளையடித்துக் கொண்டு, அவர் முச்சக்கர வண்டியில் தப்பிச் சென்றுள்ளார்.

இந்தக் கொள்ளைக்காக அவர் செயற்கைத் தலைமுடியை அணிந்திருந்துள்ளார்.

எவ்வாறாயினும், மற்றுமொரு முச்சக்கரவண்டியில் அரச புலனாய்வுப் பிரிவின் பயிலுநர் அதிகாரிகள் இருவர், சந்தேகநபரைத்பின்தொடர்ந்துசென்றுகைதுசெய்துள்ளனர்.

அவ்வேளையில் அங்கு வந்த மாத்தறைப் பிரிவுக்கான சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் வருணி போகஹவத்தவும், சந்தேகநபரைக் கைது செய்வதற்கு அரச புலனாய்வுப் பிரிவின் பயிலுநர் அதிகாரிகளுக்கு உதவியுள்ளார்.

ஆயினும், மாத்தறை பிரிவுக்கான சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் வருணி போகஹவத்த, இந்தச் சம்பவத்தில் தொடர்புபட்டுள்ளமை குறித்தும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அவர் தனது உத்தியோகபூர்வ சீருடையில் அங்கு வந்துள்ளமையோடு, அவருடன் அவரது மகளும் வாகனத்தில் இருந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. இது தொடர்பிலேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளைச் சம்பவம், குறித்த வைத்தியரினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதா அல்லது, குழுவாக மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறைப் பிரிவுக்கான சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகரின் செயற்பாடு தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பாராட்டிய போதிலும், அவர் சம்பவ இடத்துக்கு வந்தமை தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் கூறினார்.

# சாமிமலைத் தோட்டத்தில் குளவிகளால் பெரும் அச்சம்

மஸ்கெலியா சாமிமலை - டீசைட் கிலனுகி தோட்டத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் குளவிகூடு இருப்பதால் சிறார்களுக்கு பாதுகாப்பாக இருப்பதற்குரிய சூழ்நிலை இல்லாமல் போயுள்ளது.

இதனால் அச்சத்துக்கு மத்தியிலேயே பிள்ளைகளை அங்கு விட்டுவிட்டு தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கின்றனர்.

இந்தக் குளவிகூடு தொடர்பில் பொலிஸாருக்கும், தோட்ட நிர்வாகத்துக்கும் மக்கள் தெரியப்படுத்தியுள்ளனர். தோட்ட நிர்வாகத்தின் ஊடாக, வன ஜீவராசி திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அதனை அகற்றுவதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மலையகத்தில் அண்மைக்காலமாக குளவிக் கொட்டுச் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன.

இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் நால்வர் குளவிக்கொட்டுக்குப் பலியாகியுள்ளனர்.

எனவே, குறித்த குளவி கூட்டினை அகற்றி, பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மரம் வெட்டிய இளைஞர் மின்சாரம் தாக்கிச் சாவு

மின்சாரம் தாக்கியதில், இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நிவித்திகலையின் உடகரவிட்ட, உடவதுபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த எச்.ருவன் குமார் (வயது 22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் மரத்தை வெட்டிய நிலையில், மரம் மின்சாரக் கம்பிகளில் சாய்ந்ததைத் தொடர்ந்து, இவர் மின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக நிவித்திகலைப் பொலிஸார் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அமைதியான போராட்டத்தை பொலிஸாரே கலவரமாக்கினர்

## அத்துரலிய ரத்ன தேரர் சாடல்



கொழும்பு, ஜூன் 11

அமைதியாக இடம்பெற்ற போராட்டத்தை பொலிஸார் தான் கலவரமாக மாற்றினார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் சாடியுள்ளார்.

அமெரிக்கத் தூதரகத்தில் முன்பாக இடம் பெற்ற போராட்டத்தில் முன்னிலை சோசலிச கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பேசிய அவர் –

அமெரிக்கப் பொலிஸாரினால் கொல்லப்பட்ட கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புளோய்ட்டினின் மரணத்திற்கு நியாயம் கோரியும். அமெரிக்காவில் தற்போது சிவில் சமூகத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் முன்னிலை சோசலிச கட்சி மற்றும் சமூக ஆர்வளர்களின் அமைப்பினால் அமெரிக்க தூதரகத்தின் முன்னாக அமைதி வழிப் போராட்டம் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி முன்னெடுக்கப்பட்டது.

அமெரிக்க தூதரகத்தின் முன்னாக போராட்டத்தில் ஈடுப்பட வேண்டாம் என நீதிமன்றம் தடையுத்தரவு வழங்கியுள்ள நிலையில் போராட்டத்தில் ஈடுப்பட்டமை முற்றிலும் தவறான செயற்பாடாகும். இருப்பினும் பொதுக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பட்சத்தில் ஒரு சில காரணிகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

சுகாதார பாதுகாப்பினைக் காரணம் காட்டி பேச்சு சுதந்திரம் முடக்கப்படுகின்றது. பொது மக்கள் தங்களின் அரசியல் கருத்துக்களையும், பொது கருத்துக்களையும் சுதந்திரமான குறிப்பிடுவதற்கு அரசாங்கம் தடை விதிக்க முடியாது.

தற்போதைய செயற்பாடுகள் எவ்வாறான நிலைக்கு அடித்தளமிடுகிறது என்பதை மக்கள் தெளிவாக புரிந்துக் கொள்ள வேண்டும். அனைத்து காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு பொதுத்தேர்தலில் சிறந்த தீர்மானத்தை எடுப்பது அவசியமாகும். – என்றார்.

## நியமனம் இடைநிறுத்தப்பட்டோர் தேர்தல் புறக்கணிப்பு எச்சரிக்கை



இடைநிறுத்தப்பட்ட பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நியமனத்தை மீள வழங்க நடவடிக்கையெடுக்காவிட்டால், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை தமது குடும்பங்கள் புறக்கணிக்கும் நிலையேற்படுமென இடைநிறுத்தப்பட்டோர் சங்கம் எச்சரித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட இடைநிறுத்தப்பட்ட பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் சங்கத்தின் இணைப்பாளர் கமல்ராஜ் தலைமையில், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜாவிடம், இது தொடர்பில் மகஜர் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலை காரணம் காட்டி இடைநிறுத்தப்பட்ட தமது நியமனங்களை, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் வழங்குமாறு கூறியிருந்தபோதிலும் இதுவரையில், அரசாங்கம் அவற்றை வழங்க நடவடிக்கையெடுக்கவில்லையென, சங்க இணைப்பாளர் தெரிவித்தார்.

இதற்குரிய தீர்வை விரைவாக வழங்காதுபோனால், இடைநிறுத்தப்பட்ட பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் சங்கத்தின் 6,547 குடும்பங்களும் நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலை புறக்கணிப்பதுடன், மாற்றுவழியைக் கையாளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தனர்.

## பாலையூற்றுக் கொள்ளைகளுடன் தொடர்புடைய ஐந்து பேர் கைது!

திருகோணமலை, தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலையூற்று பிரதேசத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஐவர், நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாலையூற்றுப் பிரதேசத்தில் ஒன்றறை மாதங்களாக இடம்பெற்று வந்த தொடர் கொள்ளைச் சம்பவங்கள் அடிப்படியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மேற்படி ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து தொலைக்காட்சி, குளியலறை பொருள்கள், தையல் இயந்திரம், மின்விசிறி போன்ற பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் ஐவரும், பாலையூற்று பிரதேசத்துச் சேர்ந்த 21, 22 வயதுடைய இளைஞர்கள் எனவும் தலைமையகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஐக்கிய மக்கள் சக்தி முடிந்தால் மக்கள் பலத்தை நிரூபிக்கட்டும்

### செஹான் சேமசிங்க பகிரங்க சவால்



நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் உங்களின் பலத்தை காண்பியுங்கள் பார்க்கலாம் என ஐக்கிய மக்கள் சக்திக்கு, பொதுஜன முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

ஐக்கிய மக்கள் சக்தியினர், தங்களுக்கு பலம் கிடைத்து விட்டதாக தற்போது கூறிக் கொண்டு வருகிறார்கள்.

மேலும் உங்கள் பலத்தினை பொதுத் தேர்தல் ஊடாகக் காண்பியுங்கள் என நாம் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்கிறோம்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டும். அப்போது மட்டுமே, மக்களால் நிராகரிக்கப்பட்ட எத்தனை பேர் அந்த கூட்டணியில் உள்ளார்கள் என்பதை தெரிந்துக் கொள்ள முடியும். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## யோகா தினத்தை முன்னிட்டு கட்டுரை, ஓவியப் போட்டிகள்

யோகாக் கலையை மாணவர்களிடையே கொண்டு சேர்க்கும் முகமாகத் தேசிய யோகா தினத்தை முன்னிட்டு இந்தியத் துணைத் தூதரகத்தின் அனுசரணையில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு கட்டுரை, ஓவியப் போட்டிகளை நடத்துகிறது.

கட்டுரையானது யோகா கலையின் பயன்பாடு, யோகா கலை மனித உடம்பமைப்பு மற்றும் மனநிலையில் ஏற்படுத்துகின்ற மாற்றம், தியானத்தின் நன்மைகள் ஆகிய தலைப்பில் பு4 தாளில் 2ஆயிரம் சொற்களில் எழுதப் பட வேண்டும்.

ஓவியமானது பு4 தாளில் யோகாவின் முக்கிய அம்சங்கள் மற்றும் பயன்பாடுகளைப் பிரதிபலிக்கக் கூடியதாக வர்ணப் பென்சில் மூலம் வரையப்பட வேண்டும்.

இவற்றை 17.6.2020க்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும். வெற்றியாளர்களக்கான பணப்பரிசில்கள் 21.6.2020அன்று தேசிய யோகா தின நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

## இலங்கை முன்னணியில்

உலகளாவிய ரீதியில் கொரோனா நோயாளிகள் வேகமாக குணமடையும் நாடுகளில் இலங்கை முன்னணியில் உள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து மீண்டவர்களை, உலகின் மிக முக்கிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை 56.86 வீதத்தில் உள்ளது.

உலகில் அதிக கொரோனா மரணங்களை பதிவு செய்த அமெரிக்காவில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்கள் நூற்றுக்கு 38.56 வீதத்திலும், பிரேசிலில் 43.88 வீதத்திலும் உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# 20 ஆயிரம் புலனாய்வாளர்களைக் களத்தில் இறக்கி அடக்குமுறைத் தேர்தலை நடத்தப் போகின்றனரா?

## சுதந்திரபுரம் படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் சிவமோகன் கேள்வி

முல்லைத்தீவு, ஜூன் 11

இந்த அரசு செயற்படும் விதம் ஜனநாயகத்திற்கும் எமது மக்களின் வாழ்வியலுக்கும் எதிரானது என்பதை அடித்து சொல்கின்றேன் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

சுதந்திரபுரம் படுகொலையின் 22 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம் படுகொலையின் 22ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, பொலிஸாரின் தடைகளையும் மீறி, சுதந்திரபுரம் – வெள்ளப்பள்ளம் இந்து மயானத்தில், நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

இந்தப் படுகொலையின் 22ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், நேற்றைய தினம் முற்பகல் 9.30 மணியளவில், சுதந்திரபுரம் நிரோயன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதன்போது, நினைவேந்தல் நிகழ்வுக்கு வருகை தந்தவர்களை, புதுக்குடியிருப்பு பொலிஸார் இவ்விடத்தில் இருந்து செல்லுமாறு பணித்தமையுடன், நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கும் தடைவிதித்தனர்.

இதையடுத்து, சுதந்திரபுரம் சந்தி பகுதியின் இருமருங்கிலும் விளையாட்டுக்கழக மைதானத்தைச் சூழவும் பொலிஸார், இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, அவ்வழியே சென்றவர்கள் அனைவரது அனுமதிப் பத்திரங்களும் பரிசோதிக்கப்பட்டன. நினைவேந்தல் நிகழ்வு நிறுத்தப்பட்டு, ஏற்பாட்டாளர்களும் திருப்பி அனுப்பப்பட்டனர்.



இந்நிலையில், இந்த இடத்திலிருந்து திரும்பிச் சென்ற ஏற்பாட்டாளர்கள், உயிரிழந்த உறவுகளில் ஒரு பகுதியினரை அடக்கம் செய்த சுதந்திரபுரம் – வெள்ளப்பள்ளம் இந்து மயானத்துக்குச் சென்று நினைவேந்தல் நிகழ்வை நடத்தினர்.

இந்நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கனகராசா ஜீவராசா, விசுவமடு – தேராவில் மாவீரர் துயிலும் இல்ல நினைவேந்தல் குழுவின் தலைவர் தம்பையா யோகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு சிவமோகன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

மாறி மாறி வந்த சிங்கள அரசுகள் தமிழர்கள் மீது இனப்படுகொலையை நடத்தியதற்கு சுதந்திரபுரம் படுகொலை அடையாளமாக இருக்கின்றது. இந்த நினைவு நிகழ்வு ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வந்தது. இன்று கொரோனாவினை காரணம் காட்டி நினைவேந்தலை தடுத்தார்கள்.

இது தேர்தல் காலம். இந்த காலத்தில் எமது காணிகளை அடையாளம் கண்டு படையினர் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதற்கு அரச அதிகாரிகள் துணை போகின்றார்கள். தேர்தல் காலத்தில் வேட்பாளர் இலக்கங்கள் அறிவிக்கப்பட்டபின் தேர்தலில் ஒரு நோக்கத்தினை பின்புலமாக கொண்டு வடமாகாணம், கிழக்கு மாகாணத்தில் காணிகளை அளக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இவர்கள் இந்த தேர்தல் சட்டத்தினை மீறியுள்ளார்கள். அதே கொரோனா சட்டத்தினை நாங்கள் மீறவில்லை கடைப்பிடிக்கின்றோம்.

இது தொடர்பில் தேர்தல் திணைக்களத்திற்கு சென்று முறையிடவுள்ளேன். காணி அளப்பு நடவடிக்கையினை நிறுத்துமாறு உடனடியாகத் தேர்தல் திணைக்களம் பிரதேச செயலகங்களுக்கும் அரச அதிபருக்கும் அறிவிக்க வேண்டும்.

தவறுமாக இருந்தால் தெரிவத்தாட்சி அலுவலகர்களாக இருப்பதற்கு அரச அதிபர்களுக்கு தகுதி இல்லை.

இந்த நினைவு நிகழ்வை நடத்த விடாமல் பொலிஸாரைப் போட்டு அடாவடி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

காரணமாக சொல்வது கொரோனா சட்டம். கொரோனாச் சட்டத்தின் மூலம் நாங்கள் முப்பது பேர் ஒன்று சேர முடியாது என்றால் இந்த சட்டத்தினை வைத்துக் கொண்டு எப்படி தேர்தலுக்கான இலகத்தினை வழங்கியுள்ளார்கள்? இன்றோ நாளையோ தேர்தல் பிரச்சாரம் ஆரம்பிக்கப்படப் போகின்றது. எப்படி இவர்கள் இந்த தேர்தல் பிரச்சாரத்தினை ஆரம்பிக்க விடப்போகின்றார்கள்?

எனவே இதனை ஓர் இரகசியத் தேர்தலாக நடத்தப்போகின்றார்களா? இருபதாயிரம் புலனாய்வாளர்கள் இறக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியால் புலனாய்வாளர்களுக்கான கடமை வழங்கப்பட்டுள்ளது. இருபதாயிரம் புலனாய்வாளர்களை வைத்துக்கொண்டு மக்களிடையே ஓர் அடக்குமுறைத் தேர்தலை நடத்த முற்படுகின்றது இந்த அரசு.

இலக்கங்கள் வழங்கப்பட்டுவிட்டன. சுகாதார நடைமுறைகள் எப்படி கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று வர்த்தகமானி வந்துள்ளது. அதில் ஒரு பொது இடத்தில் 100 பேர் கூடுவதற்குத் தகுதி உண்டு எனத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

இப்படி இருக்கும் போது எமது நினைவேத்தலை தடுத்தது சரியா? எனவே இந்த அரசு செயற்படும் விதம் ஜனநாயகத்திற்கும் எமது மக்களின் வாழ்வியலுக்கும் எதிரானது என்பதை அடித்து சொல்கின்றேன். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதும் மரணதண்டனை கொடுப்பதை தலைவர் நிறுத்தினார்

## இப்படிக் கூறுகிறது புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு எப்போது உருவாக்கப்பட்டதோ அப்போதே மரண தண்டனை கொடுப்பதை தேசிய தலைவர் நிறுத்தி விட்டார். ஏனைய போராட்ட இயக்கங்களுக்கும் எங்களுக்கும் இடையில் வேறுபாடு இருக்கின்றது என புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்துள்ளார்.**



வவுனியாவில் தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்தமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகித்துக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கட்சியின் சார்பாகவும், ஒன்றியத்தின் சார்பாகவும் வடக்கு கிழக்கு இணைந்த எமது போராளிகள் சந்திப்பை மேற்கொண்டுள்ளோம். கட்சி ஆரம்பித்து 5 வருட காலமாக பயணித்த வேளையில் கடந்த பிரதேச சபை தேர்தலிலும் போட்டியிட்டுள்ளோம். இன்று எமது கட்சியை சர்வதேச ரீதியில் தெரியும்.

2009 ஆம் ஆண்டு ஆயுதம் மௌனிககப்பட்ட பின்னர் புனர்வாளிக்கப்பட்ட கட்சி என இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு அமெரிக்கா தூதுரகம் வந்து கட்சி ரீதியாகச் சந்தித்தது.

ஆனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் தமிழரசுக் கட்சி தலைவர் எம்மை போராளிகள் என்ற வகையில் இன்று எம்மைத் தாம் சந்தித்தார் என தெரிவித்திருந்தார்.

வாக்குகள் சிதறிக்கப்படாது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வலுச் சேர்க்க வேண்டும். எமது தேசியத் தலைவர் இருக்கும் போது தேசியப் பட்டியலுடன் இணைந்து 22 ஆசனங்களைபெற்றது. பலதரப்பட்ட கட்சிகளை உள்வாங்கியிருந்தார். சில கட்சிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை மற்றும் செயற்பாடு காரணமாக அதில் இருந்து பிரிந்து சென்று வடக்கிலும், கிழக்கிலும் புதிய கட்சிகளை உருவாக்கியுள்ளார்கள்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சியாகிய நாம் கடந்த 5 வருடங்களாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மற்றவர்களை விட நாம் விமர்சித்தமை உண்டு. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ரெலோ, புளொட், தமிழரசுக் கட்சி என்பன தான் உள்ளன. காலத்தின் தேவை கருதி எமது போராளிகளின் கோரிக்கைக்கு அமைவாக எம்மையும் அதில் இணையுமாறு பலர் கூறியமைக்கு இணங்க நாமும் இணைவதற்காகப் பலருடன் பேசியுள்ளோம். தற்போது கடிதம் ஒன்றை மாவை சேனாதிராஜாவிடம் கையளித்துள்ளோம். எம்மை இணைத்தால் ஏனைய போராளிகளையும் இணைத்து ஒன்று சேர்த்து பயணிக்க முடியும். அவர்கள் அதனை சாதகமாக பரிசீலிப்பார்கள் என நம்புகின்றோம். அல்லது மாற்று வழிகள் உண்டு.

2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் புனர்வாழ்வு பெற்ற 12 ஆயிரம் விடுதலைப் புலிகளில் இன்னும் பல கட்சிகளை உருவாக்க இருக்கிறார்கள். இந்த நிலையில் எங்களை உள்வாங்க வேண்டி பாரிய பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றது. எங்களை அவர்கள் உள் வாங்கினால் இன்னும் 10 வருடத்தில் மீண்டும் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களாக வர முடியும்.

நாங்கள் இறுதி வரைப் போராடி புனர்வாழ்வு பெற்று வந்தவர்கள். எங்களுடைய கருத்துக்கும் ஏனைய ஆயுதம் தாங்கிய கட்சிகளின் கருத்துக்கும் வித்தியாசம் இருக்கின்றது.

மேற்தட்டு அரசியல்வாதிகள் விட்ட பிழை காரணமாகவே போராளிகள் பிரிந்து நிற்கின்றார்கள். ஆகவே எமது புரிந்துணர்வு கடிதத்தை ஏற்று போராளிகள் பிரிந்து செல்லாமல் இருக்கக் கூட்டமைப்பு எம்மையும் உள்வாங்க வேண்டும்.

நாங்கள் இன்றும் வீடு, காணி, வருமானம் இன்றி தான் இருக்கின்றோம். எங்களுக்கு நாடாளுமன்றம் போக வேண்டும், வீடு கட்ட வேண்டும், சொகுசு வாகனம் ஓட வேண்டும் என்ற ஆசை இல்லை. வீதியில் உண்ணா விரதம் இருந்து சாவதற்கும் இன்றும் நாம் தயாராகத் தான் இருக்கின்றோம். எங்களை இணைந்து கொள்ளாவிட்டால் நாம் இவர்களுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடுவோம். – என்றார்.

ஏனைய ஆயுதப் போராட்ட இயங்கங்கள் வேற. 2004 ஆம் ஆண்டு கருணா பிரிந்த நேரத்தில் மரண தண்டனை கொடுக்க வேண்டிய ஒருவரை பொட்டமான் இனம் காட்டினார். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எப்போது உருவாக்கப்பட்டதோ அப்போதே மரண தண்டனை கொடுப்பதை தேசிய தலைவர் நிறுத்தி விட்டார். ஏனைய ஆயுதம் தாங்கிய குழுக்கள் எங்களுக்கு எதிராக இந்திய இராணுவம், இலங்கை இராணுவம் என்பவற்றுடன் இணைந்து செயற்பட்டன். 1998 ஆம் ஆண்டு வவுனியா கச்சேரி முன்பாக இருந்த போது புளொட்டின் வேதனையை கண்ணுக்கு முன் அனுப்பவித்தேன். எங்களது தலைவர் அவர்களை எல்லாம் மரண தண்டனை கொடுக்க கூடாது என பின்னர் ஒன்று சேர்த்தார். ஏதோ ஒரு விதத்தில் அவர்கள் எமது மக்களுக்கு எதிராக, போராட்டத்திற்கு எதிராக, மண்ணுக்கு எதிராக செயற்பட்ட குழுக்கள். ஆனால் நாங்கள் தலைவரின் வழிகாட்டிலில் இறுதி வரை முள்ளிவாய்கால் சென்று ஏனைய குழுக்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு அழிக்கப்பட்டு நிர்கதியாக நிற்கின்றோம். எங்களது போராளிகள் வீதிகளில் சுற்றி திரிய அவர்கள் வாகனங்களில் திரிகிறார்கள்.

நாங்கள் தண்ணீர் இல்லாமல், சாப்பாடு இல்லாமல், பங்கருக்குள் இருந்து போராட அவர்கள் வாகனங்களில் ஓடித் திரிகிறார்கள். விரக்தியாக இருக்கிறது. கல்லெறியணும் போல் இருக்கிறது. இது தான் இன்றைய நிலை.

அத்துடன், அண்மையில் டக்ளஸ் தேவானந்தா அவர்களை சந்திக்க போன போது அவர் எங்களது தலைவருக்கு யார் அதிகாரம் கொடுத்தது? எங்களது தம்பியை எப்படி சுடுவார் என கூறுகிறார். நான் முரண்பட்டு வெளியேற அவரது தம்பி எமது போராளிகளை பிரிக்க பேசுகிறார் எனவும் தெரிவித்தார்



## தமிழ் முற்போக்கு கூட்டணியினர் இந்தியத் தூதுவருடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 11

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லேவுக்கும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று இன்று நடைபெற்றது.

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான திகாம்பரம், ராதாகிருஷ்ணன் மற்றும் செயலாளர் நாயகம் ஆகியோர் முற்போக்கு கூட்டணியின் சார்பில் பங்கேற்றிருந்தனர்.

இந்தியாவின் உதவியுடன் மலையகத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஊழல், மோசடியாளர்களுக்கு முடிவுகட்டத் தயாராகுங்கள்!

### மக்களிடம் மஹிந்த கோரிக்கை



நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஊழல், மோசடியாளர்களுக்கு நாட்டு மக்கள் முடிவுகட்ட வேண்டும். அவர்களைப்படுதோல்வியடையச்செய்ய வேண்டும். அதற்காக மக்கள் இப்போதிருந்தே தயாராக வேண்டும்.

– இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தலைக் காலவரையறையின்றி ஒத்திவைக்க எதிரணியினர் முயற்சித்தனர். ஆனால், அந்த முயற்சிக்கு உயர்நீதிமன்றம் பதிலடிகொடுத்தது. அதேவேளை, வேட்புமனுக்களையும் மீளத் தாக்கல் செய்ய எதிரணியினர் முயற்சித்தனர். அதுவும் தோல்வியில் முடிந்தது. ஒன்றும் செய்ய முடியாத நிலையில்தேர்தலைச்சந்திக்கவேண்டிய நிலை எதிரணிக்கு ஏற்பட்டுள்ளது.


மக்களின் ஜனநாயக உரிமையை சவாலுக்குட்படுத்திய எதிரணியினருக்குத் தேர்தலில் மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள்.

கடந்த ஆட்சியில் ஊழல், மோசடிகளால்நாட்டின்பொருளாதாரத்தைசீரழித்த ஐக்கிய தேசியக்கட்சியினரையும், ஐக்கிய மக்கள் சக்தியினரையும் மக்கள் வீட்டுக்கு அனுப்பியே தீருவார்கள் – என்றார்.




# சித்திரப்போட்டி





படம் 1
எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் **'ஆய்வு கூடம்'** எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்த வர்களது பெயர் விபரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.



படம் 2
டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'கொரோனாச் சந்தை'**

த. கபிலாஷ் – தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

ராமதாசன் ஹர்சிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

டி. அபிலாஷ் – தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

இ. கார்த்திகன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பி. ரொமிரேஷ் – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ச. கோபிசாந்த் – தரம் 6
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

கே. நிருஜிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அவிஸ்கிகன் விமலானந்தன் – தரம் 1
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

சந்திரகுமார் அவிநாஷ் – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

ஆர். பிரிதி – தரம் 1
தி/உவர்மலைவிவேகாநந்தா கல்லூரி

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஞா. ரிசாந் – தரம் 3
தி/உவர்மலைவிவேகாநந்தா கல்லூரி

சி. சிவகலை – தரம் 4
யா/இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

கி. துஷாந்த் – தரம் 8
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

என் வித்யாசாகர் – தரம் 9
தி/உவர்மலைவிவேகாநந்தா கல்லூரி

அபர்ணா உதயகுமார் – தரம் 6
David Leeder Middle School, Canada.

வி. ஹாருண் – தரம் 7
தி/உவர்மலைவிவேகானந்தாகல்லூரி

வி. கமரூன் – தரம் 1
தி/உவர்மலைவிவேகானந்தாகல்லூரி

தி. கோவெழிலன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா – தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

லோ. சிவயாணு – தரம் 7
யா/ இந்து மகளிர் கல்லூரி

உ. ரோஷித் – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

காலைக்கதிர் Kalaikkathir

**கொரோனாச் சந்தை**




**இன்று (11/06/2020) தலைப்பு**
**கொரோனாச் சந்தை**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# ஆனைவிழுந்தான் வயற்காணிகள் உடனடியாகவே விடுவிக்கப்படும்!

## முன்னாள் எம்.பி. சிறீதரனுக்கு நேற்று வனப்பாதுகாவலர் நாயகம் உறுதிமொழி





வனப்பாதுகாப்பு திணைக்களத்தினரால் கையகப் படுத்தப்பட்டுள்ள ஆனைவிழுந்தான் வயற்காணி களை உடனடியாக அம்மக்களுக்கு மீள வழங்குவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வனப்பாதுகாவ லர் நாயகம் மஹிந்த செனவிரத்ன உறுதியளித்துள் ளார்.

ஆனைவிழுந்தான் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் நேற்று கொழும்பு, பத்தரமுல் லையில் அமைந்துள்ள வனப்பாதுகாப்புத் திணைக் களத்தின் தலைமை அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று வனப்பாதுகாவலர் நாயகம் மஹிந்த சென விரத்னவுடன் இவ்விடயம் குறித்து நேரில் விரிவாகக் கலந்துரையாடினர். அந்தக் காணிகளை விடுவிக்கக் கோரி ஆனைவிழுந்தான் மக்கள் சார்பில் எழுத்து மூலக் கோரிக்கை ஒன்றையும் சமர்ப்பித்து, அக்காணி களை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கு மாறு வலியுறுத்தினர்.

அப்போதே வனப்பாதுகாவலர் நாயகம் இந்தக் காணிகளை உடனடியாக விடுவிப்பார் என உறுதிய ளித்துள்ளார் என்று சிவஞானம் சிறீதரனின் ஊடகப் பிரிவுத் தகவல்கள் தெரிவித்தன.

1984ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆனைவிழுந் தான் கிராம மக்களுக்கு வழங்கப்பட்ட இவ்வயற் காணிகளில் அவர்கள் தொடர்ச்சியாக பயிர்ச்செய் கையில் ஈடுபட்டு வந்த நிலையில், இறுதியுத்தத் தின் பின்னரான 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்ற காலப்பகுதியில் குறித்த காணிகளை வனப்பாது காப்புத் திணைக்களத்தினர் தமக்குரியதாக அடை யாளப்படுத்தினர். இதனால் அம்மக்களின் வாழ்வா தார செயற்றிட்டம் தடுக்கப்பட்டிருந்தது.

இக்காணிகளை விடுவிக்குமாறு கோரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரனால் கடந்த 2019.07.29 ஆம் திகதிய கிளிநொச்சி மாவட்ட ஒருங்கி ணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டதோடு, 2020.05.04 ஆம் திகதி நடைபெற்ற பிரதமருடனான கலந்து ரையாடலிலும் இவ்விடயம் வலியுறுத்தப் பட்டிருந்தது.

அதன்பின்னர் 2020.06.06 ஆம் திகதி ஆனைவிழுந்தான் வயற்காணிகளை நேரடியாக சென்று பார்வையிட்டு, அம்மக் களை சந்தித்து கலந்துரையாடியதன் பின் னர்,நேற்றையதினம் வனப்பாதுகாவலர் நாயகத்தை நேரில் சென்று சந்தித்தபோது இம்முடிவு எட்டப்பட்டுள்ளது. இம்மக்கள் கடந்த பத்து ஆண்டுகளாக முன்வைத்த கோரிக்கைகளுக்கும், அக்காணிகளை விடுவிப்பதற்குத் தொடர்ச்சியாகப் பல அழுத்தங்களைப் பிரயோகித்து வந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் முயற்சிக்கும் கிடைத்த வெற்றியாக இதனைக் கருத முடியும். - அந்த ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்தது

# 6 மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு!

நாட்டில் டெங்கு அபாயம் மிக்க வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள 06 மாவட்டங்களில் இன்று வியாழக்கிழமை முதல் மூன்று நாட்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது எனத் தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்க ளில் இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கொட்டகலையில் நேற்று மாலை விபத்தில் இளைஞர் ஒருவர் பலி



திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்ட கலை ரொசிட்டா பண்ணைக்கு அருகாமையில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

அட்டன் பகுதியை சேர்ந்த 28 வயதான மனோகரன் கணேஷ் என்பவரே மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

நண்பர் ஒருவரின் வீட்டில் நடைபெற்ற பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வில் கலந்துகொண்டு அட்டன் நோக்கி பயணிக்கையிலேயே அவர் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

கொட்டகலை நகரிலிருந்து லொக்கீல் நோக்கி பயணிப்பதற்கு தயாரான ஆட்டோவொன்றுடன் அவர் செலுத்திய மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதியுள்ளது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் இருந்து அவர் வீசப்பட்டுள்ளார். வீதிக்கு அருகாமையில் இருந்த 'காட் கல்' எனப்படுகின்ற எல்லை நிர்ணய கல்லில் தலைபட்ட தாலேயே அவர் உயிரிழந்தார். அவர் மோட்டார் சைக் கிளில் இருந்து வீசுபடும் போது தலைக்கவசமும் கழன் றுள்ளது.

படுகாயமடைந்த அவர் கொட்டகலை வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்படும் வழியில் உயிரிழந் தார் என்றும், சடலம் பிரேத பரிசோதனைக்காக கொட்ட கலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.06.2020 இல் வெளியிடப்பெற்றது.